இலங்கை ஜனாதிபதித்தேர்தல் முடிவுகள் பற்றி ....

Written by - வ.ந.கி -
Sunday, 17 November 2019 09:08 - Last Updated Sunday, 17 November 2019 10:01

இலங்கையின் பெரும்பான்மையின மக்கள் தமது ஜனாதிபதியாக கோத்தபாய ராஜபக்சவைத் தேர்ந்தெடுத்திருக்கின்றார்கள். அதே சமயம் சிறுபான்மையின மக்கள் சஜித் பிரேமதாசாவைத் தேர்ந்தெடுத்துள்ளார்கள்.

இன, மத மற்றும் மொழிரீதியாகப் பிளவுண்ட இலங்கையில், ஓரினத்தின் ஜனாதிபதியாக கோத்தபாயா ராஜபக்ச வென்றிருக்கின்றார். சிறுபான்மையின மக்களுட்பட நாற்பத்தொரு வீதம் மக்கள் அவருக்கு எதிராக வாக்களித்துள்ளார்கள். அதே சமயம் 52.51 வீதம் மக்கள் (6,883,620) அவருக்கு ஆதரவாக வாக்களித்துள்ளார்கள். இனவாதத்தை அள்ளி வீசி, தென்னிலங்கையில் சிங்கள மக்களை இனரீதியாகத் தூண்டி பெரு வெற்றியினைக் கோத்தபாயா பெற்றிருக்கின்றார். இலங்கையின் பெரும்பான்மையின மக்களைப் பொறுத்தவரையில் இலங்கையில் அவர்கள் இனரீதியாக ஒடுக்கப்பட்டு வாழ்பவர்களல்லர். அவர்களில் பலர் சிறுபான்மையினர் அடையும் துன்பங்களை இன்னும் அறிய முடியாதிருப்பது துரதிருஷ்ட்டமானது. தமிழர்களுக்கு அதிக

1 / 4

இலங்கை ஜனாதிபதித்தேர்தல் முடிவுகள் பற்றி ....

Written by - வ.ந.கி -
Sunday, 17 November 2019 09:08 - Last Updated Sunday, 17 November 2019 10:01

உரிமைகளைப் பெற்றுக் கொடுத்து விடுவார் சஜித் என்று இனவாதத்தைக் கக்கித் தென்னிலங்கையில் அமோக வெற்றி பெற்றிருக்கின்றார் கோத்தபாயா ராஜபக்ச. இவரது வெற்றி இனவாதத்துக்குக் கிடைத்த வெற்றி. அதே சமயம் 41.7% வீத மக்கள் (5,467,088) இனவாதத்துக்கு எதிராக வாக்களித்துள்ளார்கள். அதனையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

கோத்தபாயாவின் வெற்றிக்கு முக்கிய காரணங்களிலொன்று தற்போதுள்ள மைத்திரி - ரணில் அரசாங்கத்தின் செயலற்ற தன்மை. மகிந்தவின் ஆட்சியிலிருந்து விடுதலையைப் பெற்றுத்தந்த மைத்திரி -ரணிலின் அரசின் முக்கிய நன்மையாக நான் கருதுவது அது உருவாக்கித்தந்த ஜனநாயக வெளி. அந்த வெளி தொடருமா இல்லையா என்பதை கோத்தபாயா ராஜபக்சவின் தொடரப்போகும் ஆட்சியின் தன்மைதான் தீர்மானிக்கும். ஏற்கனவே அவருக்கு எதிராகப் பல மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள், வழக்குகள் உள்ளன. அவரது அமெரிக்கக் குடியுரிமை பற்றிய வழக்கு கூட உச்ச நீதிமன்றத்திலுள்ளது. இந்நிலையில் இவரது ஆட்சி எப்படியிருக்கப் போகின்றது? சிறுபான்மையின மக்கள், அரசியல் எதிரிகள் அச்சமுறும் வகையில் இருக்கப் போகின்றதா அல்லது அனைத்து மக்களும் அமைதியாக, சமாதானமாக வாழும் நிலை அமையப் போகின்றதா?

அதே சமயம் இத்தேர்தல் இன்னுமொரு விடயத்தையும் வெளிப்படுத்தி நிற்கிறது. தமிழர்களைப் பொறுத்தவரையில் தமிழ் தேசியக் கூட்டமைப்புத்தான் இன்னும் அவர்களின் ஆதரவைப் பெற்ற பிரதான கட்சி. இலங்கையின் சிறுபான்மையின மக்களின் ஆதரவு தனக்குக் கிடைக்கவில்லையென்பதற்காகத் தொடர்ந்தும் அவர்களைப் பழிவாங்கும் நடவடிக்கைகளில் கோத்தபாயா அரசு ஈடுபடுமா இல்லையா என்பதையும் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

2 / 4


Presidential Preference 2019
Gotabaya Rajapaksa
Sajith Premadasa
Jaffna
Kilinochchi
Mullaitivu
Vavuniya
Mannar
Anuradhapura
Trincomalee
Puttalam
Polonnaruwa
Batticaloa
Matale
Kurunegala
Ampara
Kandy
Gampaha
Kegalla
Nuwara Eliya
Badulla
Colombo
Kalutara
Monaragala
Ratnapura
Hambantota
Galle
Matara
Artwork by Achintha Kalana Herath
rn
en

இலங்கை ஜனாதிபதித்தேர்தல் முடிவுகள் பற்றி ....

Written by - வ.ந.கி -
Sunday, 17 November 2019 09:08 - Last Updated Sunday, 17 November 2019 10:01

[illegible] https://results.elections.gov.lk [illegible]

4 / 4